# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு
## ஊடக அறிக்கை

***************************

**மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கான சத்திரசிகிச்சை அலகினை நிர்மாணித்தல் குறித்த திட்ட வழிநடத்தல் குழுவின் சந்திப்பு**

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை அலகினை நிர்மாணித்தல் குறித்த திட்ட வழிநடத்தல் குழுவின் சந்திப்பு இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜெக்கப் தலைமையில் 2021 மார்ச் 16ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. இந்த சந்திப்பானது சுகாதாரம், போஷணை மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் திரு எஸ் ஜானக ஸ்ரீ சந்திரகுப்தா அவர்களின் இணைத்தலைமையின்கீழ் நடத்தப்பட்டது. இந்த கூட்டமானது இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பிரிவுக்கான தலைமை அதிகாரி திரு எல்டோஸ் மத்தியூ பூநோஸ் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். இலங்கை அரசின் சுகாதார அமைச்சு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, திட்ட ஒப்பந்ததாரரான மல்வத்தை கன்ஸ்ட்ரக்சன், இத்திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசகரான சிஇசிபி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

275 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான இந்த திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக இங்கு மீளாய்வு செய்யப்பட்டது. இத்திட்டம் நிறைவடைந்ததும் குறித்த சத்திரசிகிச்சை அலகானது மட்டக்களப்பு பிராந்தியத்தில் பொதுமக்கள் ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும். இலங்கை அரசாங்கத்துடனான பங்குடமையில் இந்திய அரசினால் மக்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் தொடர்ச்சியாக இந்த திட்டம் அமைந்துள்ளது. இதுவரையில் அபிவிருத்தி ஒத்துழைப்புக்கான உதவியாக இலங்கைக்கு 3.5 பில்லியன் அமெரிக்க டொலரினை இந்தியா வழங்கியிருக்கும் அதேவேளை இத்தொகையில் 560 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

***************

கொழும்பு

16 மார்ச் 2021